# இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

---

# 1984 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, இலங்கைப் (பாராளுமன்றத் தேர்தல்கள்) பேரவைக் கட்டளை (திருத்தச்) சட்டம்

---

*[1984, மார்ச்சு மாதம் 06 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1984, மார்ச்சு மாதம் 09 ஆம் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை: சதம் 35* *தபாற் செலவு: சதம் 60*

**1984 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, இலங்கைப் (பாராளுமன்றத் தேர்தல்கள்) பேரவைக் கட்டளை (திருத்தச்) சட்டம்**

[1984, மார்ச்சு மாதம் 06 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஒ. 67/83
1618

**1946 இலங்கைப் (பாராளுமன்றத் தேர்தல்கள்) பேரவைக் கட்டளையைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினுல் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1984 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, இலங்கைப் (பாராளுமன்றத் தேர்தல்கள்) பேரவைக் கட்டளை (திருத்த)ச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. 1946 இலங்கைப் (பாராளுமன்றத் தேர்தல்கள்) பேரவைக் கட்டளையின் 27 ஆம் பிரிவு பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது :— 381 ஆம் அத்தியாயத்தின் 27 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(அ) அப்பிரிவை, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவென மீள இலக்கமிடுவதன்மூலமும் ; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் இறுதியில் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலமும் :—

"(2) ஏதேனும் தேர்தல் மாவட்டம் தொடர்பில் வெற்றிடமொன்றை நிரப்புவதற்காகத் தேர்தலொன்றை நடாத்துமாறு கட்டளையிடும் அறிவித்தலொன்று வெளியிடப்பட்டதன்பின்னர், தேசிய பாதுகாப்பு அல்லது பகிரங்க ஒழுங்கு தொடர்பில் நிலவுகின்ற நிலைமைகள் காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத்துக்காக சுதந்திரமானதும் நியாயமானதுமான ஒரு தேர்தல் நடாத்தப்படமுடியாதென சனுதிபதி திருப்திப்படுவாராயின், இக்கட்டளையின் வேறு ஏதேனும் ஏற்பாட்டில் முரணுக எது எவ்வாறிருப்பினும், அவர்—

(அ) அத்தகைய தேர்தலுக்கான வேட்பாளர்கள் பெயர் நியமனஞ் செய்யப்பட்டிராதவிடத்து, அத்தகைய தேர்தலை நடாத்துமாறு கட்டளையிடும் அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட பெயர் நியமன நாளை கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் ஒத்திவைக்கலாம் ; அத்துடன் அதே கட்டளைமூலம் அல்லது கசெற்றில் வெளியிடப்படும் பின்னரான கட்டளையொன்றின்மூலம் அத்தகைய தேர்தலுக்கான வேறொரு பெயர் நியமன நாளை நியமிக்கலாம் ; அல்லது

(ஆ) அத்தகைய தேர்தலுக்கான வாக்கெடுப்புத் தேதியொன்றைக் குறித்துரைத்து 35(3) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தலொன்று வெளியிடப்பட்டுள்ளவிடத்து,

கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் வாக்கெடுப்புத் தேதியை ஒத்திவைக்கலாம்; அத்துடன் அதே கட்டளைமூலம் அல்லது கசெற்றில் வெளியிடப்படும் பின்னரான கட்டளையொன்றின்மூலம் அத்தகைய வாக்கெடுப்புக்கான வேறொரு நாளை நியமிக்கலாம்:

ஆயின், (அ) என்னும் பந்தியின்கீழ் அல்லது (ஆ) என்னும் பந்தியின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையெதுவும், அத்தகைய தேர்தலை நடாத்துமாறு கட்டளையிடும் அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட பெயர் நியமனத் தேதியிலிருந்து கணிக்கப்படும் பன்னிரண்டு மாதங்களுக்குப் பிந்திய தேதியொன்றுக்கு அத்தகைய தேர்தலுக்கான வாக்கெடுப்புத் தேதியை ஒத்திவைக்கும் பயனைக் கொண்டிருத்தலாகாது.".

***பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150; (வெளிநாடு) ரூபா 200; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.***